செ.வெ.எண்: 53/2017 நாள்: 20.01.2017

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் 9 ஆண் சமையலர்கள், 6 பெண் சமையலர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. எனவே மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவின் மூலம் காலிப்பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள், கன்னியாகுமரி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் வைத்து 10.02.2017 அன்று காலை 10.00 மணியளவில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

**சமையலர் பணியாளர் பணிக்கு தகுதி :**

01.07.2016 அன்றைய நாளில் 18 வயது முதல் 35 வயதிற்குள்ளும், தமிழில் எழுதப் படிக்கவும், சமையல் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்.

இந்த பணிக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அருந்ததியினர் மட்டுமே விண்ணப்பம் செய்ய வேண்டும். நேர்முக தேர்வில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள நபர்கள் வரும் 08.02.2017 அன்று மாலை 5.45 மணி வரை கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தில் நேரில் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்ப படிவங்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திலோ அல்லது **www.kanyakumari.nic.in** என்ற இணையதளத்திலோ பதிவிறக்கம் செய்யலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.